




# வீரமாமுனிவர் இலக்கியப் பெருவிழா



"உருவில்லான் உருவாகி உலகிலோரு மகனுதிப்பக் கருவில்லாக் கருத்தாங்கி கன்னித்தாய் ஆகினையே" என்று செந்தமிழில் அன்னை மரியைப்பற்றி பாடல் இயற்றிய 'இத்தாலியச் 'செந்தமிழ் வித்தகர்' வீரமாமுனிவரின் புகழ் சாற்றும் "வீரமாமுனிவர் இலக்கியப் பெருவிழா", 2023 பிப்ரவரி 10ம் நாள் வெள்ளிக்கிழமை ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடந்தேறியது.

கத்தோலிக்கத் தமிழ்ச் சங்கம், ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி, தேடல் களம் அறக்கட்டளை மற்றும் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம் இணைந்து நடத்திய இந்த விழாவை கோடம்பாக்கம் பாத்திமா ஆலய பங்குத்தந்தை அருள்பணி. இக்னேசியஸ் தாமஸ் அவர்களும் ஸ்டெல்லா மாரிஸ் FMM இல்லத் தலைவி மற்றும் சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். தமிழ்த்திரு. வி . த. வேதநாயகம், தலைவர், கத்தோலிக்கத் தமிழ் சங்கம், அளித்த விழா குறித்த முன்னுரையுடன் முனைவர் மோ. பாட்டழகன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. சுரேஷ் மரியசெல்வம், கத்தோலிக்கத் தமிழ் சங்கம் 1962ல் தோற்றுவித்தது முதல் இந்த விழா வரை நடந்த நிகழ்வுகளை நோக்கவுரையில் விளக்கினார். பெண்கள் கிறித்துவக் கல்லூரி மற்றும் ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி மாணவியர் வீரமாமுனிவர் தமிழ் இலக்கண மரபுப்படி தமிழுலகிற்கு அளித்த பங்களிப்பு குறித்து தங்கள் கருத்துக்களை அவையில் செம்மைப்பட பேசினர். அடுத்து கருத்துரையாற்றிய முனைவர். புனிதமலர், பேராசிரியர், குருநானக் கல்லூரி, வீரமாமுனிவரின் இந்தியப் பயணம் மற்றும் அவரது பண்மொழியாற்றல் குறித்து விவரித்தார். அவரைத் தொடர்ந்து முனைவர். ஜே. ஜெயதீபா, உதவிப்பேராசிரியர், ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி, வீரமாமுனிவர் அளித்த சிறந்த படைப்புக்களை நாம் புரிந்துகொள்ளாமல் இன்னும் தேடலில் இருக்கின்றோம் என்றார். தொடர்ந்து அருள்பணி. சகாயராஜ், சே.ச, தமிழ்த்துறை பேராசிரியர், லொயோலா கல்லூரி, தனது வாழ்த்துரையில், வீரமாமுனிவரின் எழுத்து சீர்திருத்தம் மற்றும் அவரின் சொல்லகராதி குறித்து தமது கருத்தை பள்ளி மாணவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் விளக்கினார். அடுத்து பேசிய 'தமிழ்ச்செம்மல்', நந்திவரம் பா. சம்பத் குமார், நிறுவனர், தேடல் களம் அறக்கட்டளை, வீரமாமுனிவரின் தமிழ்ப்பணியை இளையோர் முன்னெடுத்துச் செல்ல அறிவுறுத்தி தூய தமிழில் பேசுவதின் சிறப்பையும் வலியுறுத்தினார். இறுதியாக சிறப்புரையாற்றிய எழுத்தாளர் நிவேதிதா லூயிஸ், வீரமாமுனிவர் வாழ்ந்த தளங்களில் தமக்கு கிடைத்த அனுபவங்களையும், கேட்டறிந்த சொல்தரவுகளையும் வரலாற்று நிகழ்வுகளுடன் இணைத்து வீரமாமுனிவர் குறித்த செய்திகளைப் பகிர்ந்துகொண்டார்.

முன்னதாக, தமிழ்த்திரு. வி . த. வேதநாயகம் அவர்கள் எழுதிய "தமிழ் உரைநடையின் முன்னவர் — வீரமாமுனிவர்" என்னும் கையடக்க வடிவிலான நூல் அருள்பணி. இக்னேசியஸ் தாமஸ் வெளியிட அனைவருக்கும் அதன் பிரதிகள் வழங்கப்பட்டன. சிறப்பித்த விருந்தினர்களுக்கு திரு. இன்னாசிமுத்து அவர்கள் பூஞ்செடி குருத்துக்களை வழங்கி கௌரவித்தார்.

முனைவர்.இ. நந்தமிழ் நங்கை, தமிழ்த்துறைத் தலைவி, நன்றி நவில, பல்வேறு பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆன்றோர்கள் கலந்துகொண்ட இந்த விழா இனிதே நிறைவு பெற்றது.

சுரேஷ் மரியசெல்வம்





'தமிழ்ச்செம்மல்', நந்திவரம் பா. சம்பத் குமார்





















Extracts from: Annai Fatima News (Monthly Magazine)

Date: Volume 16, Issue 8/ Feb 2023 – Lent Special

Page: 5